உ

கடவுள் துணை.

தென்னிந்தியா றெயில்வே

என்னும்

கர்னாடகப்புகைவண்டியின்சிந்து.

சென்னை - புரசை

சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1905.

விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது சென்னை பெரம்பூர் பாறக்ஸ் போஸ்டைச்சார்ந்த பெருமாள்பேட்டை வல்லம்பங்காருசெட்டி வீதி 25-வது நெ, வீட்டில் ஸ்தாபித்திருக்கும் சுந்தரவிலாசஅச்சுக்கூடத்தில் அநேகவித தமிழ்புத்தகங்களும், நூதனமாக அச்சிட்ட புத்தகங்களும், அற்புதமானமருந்துவகைகளும், ரப்பர் முத்திரை சீல்களும், றப்பர் எழுத்துகளும், ஜெர்மன்சில்வர் நகைகளும், தங்ககிலிட் நகைகளும், டொப்பி தினுசுகளும், பித்ஆட் என்னும் சடைத்தலை குட்டைகளும் உண்டு. விபரமாக அததின்விலை முதலானதும் தெரிந்துக் கொள்ளவேண்டுமானால் ஒருகடிதம் எழுதி ½-அணாடபால் முத்திரை அதில் வைத்து தங்கள் விலாசம்தெரிவித்தால் ஒரு அணா பெறும்படியான கேட்லாக்புத்தகம் 2-அனுப்பப்படும் பார்வையிட்டு தேவையான சாமான்களுக்கு எழுதலாம்.

முன்பணம் அனுப்பாமலேவால்யுபேபில் போஸ்ட்டில் தாங்கள் எழுதும்சாமான்கள் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

☞ பூ. சு. துளசிங்க முதலியார்,

சுந்தரவிலாசம் பிரஸ்,

பிரம்பூர் பாறக்ஸ் போஸ்ட், மெட்ராஸ்.

உ

கடவுள் துணை.

தென்னிந்தியா றெயில்வே

என்னும்

கர்னாடகப்புகைவண்டியின் சிந்து.

தென்னிந்தியா றெயில்பாரடி - பெண்ணேயிது
தெற்கேபோகும்நேரடி

மன்னர்கள்தான் துதிக்கும் மதிருஸ்கருகாக
உன்னிதமாகவே புகழையாயேர்ப்பட்ட (தெ)

மண்டலத்தோர்புகழும் மதிருஸ்எழும்பூரினில்
கண்டவர்வியப்படையக் கருதிநியமித்த (தெ)

சட்டமுடன்ஸ்டேஷன் பட்டணத்தோர்போற்ற
திட்டமதாகவே கட்டியிருக்கிற (தெ)

கண்ணாடிகதவுகள் கனத்தஆபீசுகள்
விண்ணாடரும்மெச்ச விதமாகயேர்ப்பட்ட (தெ)

கைகாட்டிமரங்களும் கனத்த ஆளுகளும்
பைகாட்சினேகர்முதல் பலருமிருக்கிற (தெ)

இஞ்சின்வண்டிமுதல் இணையில்லாவண்டிகள்
அஞ்சுதலில்லாமல் தங்கியிருக்கிற (தெ)

டிக்கட்டுகள்வாங்கி இக்கட்டில்லாமலே
பக்குவமாகவே தக்கபடிபோவோம் (தெ)

சைதாப்பேட்டை ஸ்டேஷன் சார்ந்தபரங்கிமலை
பயிலாகிறெயில்வண்டி பார்மீதிலேபோகும் (தெ)

பல்லாவரம்பாரு பக்கத்தில்வண்டலூரு
எல்லார்தங்குங்கூடு வாஞ்சேரியிதுபாரு (தெ)

அங்கமதுயீடேற ஆண்டவனைப்போற்றும்
சிங்கபெருமாள்கோயில் ஸ்டேஷனிதுபாரு (தெ)

தங்கியிளப்பாறி தாகவிடாய்தீர
செங்கற்பட்டுஸ்டேஷன் சிறப்பதாய்நாம்வந்தோம் ( )

கோர்ட்டுமுதலான தூக்குமரங்களும்
மேட்டிமையாய்ச்ஜெயில் தாட்டியாய்த்தோற்றுது ( )

பொன்விளைந்தகளத்தூரு புகலரியமதுருந்தம்
தன்மையுள்ளதாசில்தார் நடத்துங்கச்சேரி (தெ)

அச்சரவாக்கமிது அடர்ந்துவரும்றெயில்வண்டி
இச்சையுடன்மாற்றும் இணையில்லாஸ்டேஷனிது ( )

ஒலக்கூருதாண்டிநாம் ஒயிலானதிண்டிவனம்
கலக்கமிலாத்தாலுக்கா கட்டழகிவந்தோம்பார் (தெ)

புதுமையுள்ளசத்திரத்தில் போஜனம்நாம்செய்து
இதமுடன்றெயிலேறி இக்ஷணம்போகலாம் (தெ)

மானிலந்தான்புகழும் மயிலமெனுந்தலத்தில்
கானமயில்மீதேறும் கர்த்தனிருக்கிறார் (தெ)

கண்டுபணிந்தால் கர்மவினைகள்போகும்
வண்டுநிகர்விழியாளே மாங்குயில்மொழியாளே (தெ)

விக்கிரவாண்டி விழுப்புரந்தாண்டி
பக்கத்தில்பண்ருட்டி பண்புள்ளஷ்டேஷனிது (தெ)

நெல்லிகுப்பமெனும நேரானவூரிது
அல்லைகற்றுந்திருப் பாதிரிப்புலியூரிது (தெ)

பேடைமயிற்கண்ணே பிரியாதசெந்தேனே
கூடலூர்ஸ்டேஷனைக் குறிப்பாகநீபாரு (தெ)

ஆலப்பாக்கமிது அடுத்தபரங்கிபேட்டை
கோலமுள்ளகாயலார் குடிகளிருக்கிறார் (தெ)

பார்தனிலுள்ளோர்கள் பத்தியாய்தான்துதிக்கும்
சீருள்ளசிதம்பரத தெரிசனஞ்செய்யடி (தெ)

நடராஜர்வீற்றிருக்கும் நலமானசிற்சபையை
மடமயிலேநீயும் மனதினிற்போற்றடி (தெ)

தொல்லைவினைகளைத் துரத்திக்கருவறுக்கும்
தில்லைமாகாளியின் தெரிசனஞ்செய்யடி (தெ)

கனிவர்க்கங்களுண்டு காசாலட்டுமுண்டு
இனிமைப்பிரசாதங்க ளிருக்குமிடமுண்டு (தெ)

தென்னிந்தியா ரெயில்வே சிந்து.

வல்வினையைத்தீர்க்கும் வயித்தீஸ்வரன்கோயில்
எல்லையைவிட்டுமகா வேகமாய்த்தான்போகும் (தெ)

மாயவரங்குத்தாலம் வயங்குநரசிங்கபேட்டை
தூயஸ்டேஷன்கள்தாண்டி துரிதமாகப்போகும்(தெ)

திருவிடைமருதூர் தேன்பொழியுங்கும்பகோணம்
பருவுஞ்செந்தலைப்பேறு வந்தோமிப்போதடி (தெ)

பாவவிநாசனம் பகரும்ஐயம்பேட்டை
சோபமதைநீக்குஞ் சொகுசுள்ள தஞ்சாவூர் (தெ)

முப்பத்திரண்டும் முதன்மையாய்செய்வித்த
தப்பில்லாபோஜராஜன் தங்கியதஞ்சாவூர் (தெ)

சாலியமங்கலம் சார்ந்தஅம்மாம்பேட்டை
நீடாமங்கலமிது நேர்ந்தகொரடாச்சேரி (தெ)

குளிக்கரைஸ்டேஷனிது குணமுள்ள திருவாரூர்
களிக்கவேதியாகரைக் கண்டுதெரிசிப்போம் (தெ)

இத்தலந்தன்னிலே யிணையில்லாதேருகள்
மெத்தவுச்சிதமாக மேன்மையாய்த்தோற்றுது (தெ)

அப்புரமிருக்கும் அடைவானஸ்டேஷன்களை
தப்பிதமில்லாமல் தன்மையுடன்சொல்வேன் (தெ)

கீவளூர்தானிது கீளர்சிக்கில்தானது
மேவிநாகப்பட்டணம் மேன்மையுடன்வந்தோம்(தெ)

திடமுள்ள திருச்சிறுப்பள்ளி ஸ்டேஷனிது
வடமேற்குறெயில்பாதை வந்துகலக்கும்பாரு (தெ)

பிட்டுக்குமண்சுமந்து பிரம்பாலடிப்பட்ட
திட்டமுள்ளசொக்கநாதர் திருமதுரை தலமிது (தெ)

அங்கயற்கண்மீனாட்சி யம்மனிருக்கிற
சங்கைகளில்லாத சன்னிதியிற்கோறு (தெ)

திருப்பரங்குன்றம் திருமாநகரம்
விருப்பமுள்ளகள்ளுகுடி விருதுபட்டிஸ்டேஷன் ()

துலுக்கப்பட்டிசாத்தூர் கோவில்பட்டிகுமரிபுரம்
தொடர்ந்துவரும்ஸ்டேஷன் துருசாய்போகும்இஞ்சின்

கண்டவர்வியப்படையுங் கடம்பூருஸ்டேஷனிது
அண்டையிலிருக்குமணி யாச்சிசத்திரமிது (தெ)

செந்தைகுண்டாதாண்டி சிறப்பானறெயில்வண்டி
விந்தைமிகும்திருநெல் வேலியிதோவந்தோம் (தெ)

ஏத்தும்திட்டப்பாறை நேத்தியாய்நாம்வந்து
தூத்துக்குடிதுலை தூரமேநாம்வந்தோம் (தெ)

தேசமெங்கும்புகள் திருவண்ணாமலையில்வாழ்
பாசமுடன்வீர பத்திரனியம்பிய (தென்னிந்தியா)

தென்னிந்தியா ரெயில்வே சிந்து.

முற்றிற்று.

புத்தக விளம்பரம்.

நோயில்லாவாழ்வென்னும்புத்தகம் 1-க்குவிலை	0 12 0
பதினெண்சித்தர் ஞானக்கோவை விலை	0 8 0
ஷை இரண்டாம் பாகம்	0 8 0
இரண்டுபாகமும் ஒரேகட்டடம் கிளோஸ்கடிதம்	1 0 0
பட்டணத்துப்பிள்ளையார் திருப்பாடல் மூலமும்-உரையும்	0 10 0
பட்டணத்தார்பாடல் உரையும் பட்டணத்தார் புலம்பல் உரையும் பத்திரகிரியார் புலம்பல் உரையும் மூன்றும் ஒரேகட்டடம் கலிகோபயிண்டு	1 2 0

(ஸ்ரீபுருஷ லக்ஷணக்குறிசாஸ்திரம்) திரேகத்திலுள்ள குறிகட்கெல்லாம் பலன்தெரிந்துக் கொள்ளும்படி அச்சிட்டது.

இதன்விலை அணா 0 12 0

ஜாதகங்கணிக்கும்விபரமும், ஜாதகனுக்கு பலாபலன்களும்பெண்கள் ஜாதகமும், எளிதிலறியும்படி அச்சிட்டிருக்கும் அநுபோகஜாதகரகசியம் கிளோஸ்கடிதம் 0 12 0.

பஞ்சபக்ஷிஆரூடம், ஆஞ்சனேயர் ஆரூடம், ஜெயமுனிவராரூடம், வால்மீகராரூடம், அஷ்டதிக்காரூடம் ஆக 5-விதஆரூடங்களும் ஒரேகட்டடம் கலிகோபயிண்டு விலை அணா - 12.

பதினெண்சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய வாதக்கோவை பொழிப்புரையுடன் கலிகோபயிண்டு விலை	0 12 0

இப்படிக்கு

பூ. சு. துளசிங்க முதலியார்,
சுந்தரவிலாசம்பிரஸ்,
பிரம்பூர் பாரக்ஸ் போஸ்ட், மதராஸ்.